தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
ஆணை எண். 100/பேரூ/2021

நாள் 07. 02.2022

திரு. சு. ராமராஜ்,
சக்கம்பட்டி, தேனி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி, நெ.320 தேனி மெயின் ரோடு, சக்கம்பட்டி என்ற முகவரியில் வசிக்கும் திரு. சு. ராமராஜ் என்பவரின் 31.08.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.09.2021ல் பெறப்பட்டு, 100/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி, நெ.320 தேனி மெயின் ரோடு, சக்கம்பட்டி என்ற முகவரியில் வசிக்கும் திரு. சு. ராமராஜ் என்பவர் தமது 31.08.2021 நாளிட்ட புகார் மனுவில் ஆண்டிபட்டி பிட்.1 சர்வே எண்.488/1A, 489/2–வில் உள்ள இடத்திற்கு வீட்டுவரி எண்கள் (1) 6728 (தற்போது வரி எண்.8324) (2) 6731 (தற்போது வரி எண்.6327) (3) 6900 (தற்போது வரி எண்.8820) (4) 8740 (5) 8711 (6) 10567 (தற்போது வரி எண்.8862) ஆகிய வீட்டுவரி மற்றும் கட்டிட அனுமதி எண்.130/2013–2014 நாள் 06.02.2014 தொடர்பாக ஆண்டிபட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ராஜசேகரன் மகன் தியாகராஜன் வாதியால் ஆண்டிபட்டி பேரூராட்சி நிர்வாக அதிகாரி, தேனி மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை, தேனி மாவட்ட ஆட்சியர், திருமதி. எஸ். நாச்சியாரம்மாள், த. பழனியம்மாள் மற்றும் எஸ். ராமராஜ் ஆகியோர்களை பிரதிவாதிகளாகக் கொண்டு தொடுக்கப்பட்ட அசல் வழக்கு

எண்.159/2015, வாதியான திரு. தியாகராஜன் ஆஜராகாததால் 08.01.2021 அன்று பிரதிவாதிகளுக்குச் சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதென்றும், அதன் அடிப்படையில் மேற்காணும் வீட்டுவரியை பாகம் பிரிக்காமல் உள்ள கூட்டாமை நிறுவனம் “ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ்” என்ற பெயருக்கு மாற்றிட கடந்த 18.1.2021 மற்றும் 08.02.2021 ஆகிய தேதிகளில் ஆண்டிபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் விண்ணப்பம் செய்ததில், எந்தவிதமான பதிலும் இல்லை என்றும், எனவே தமது புகார் மனு மீது விசாரணை செய்து மேற்கண்ட வீட்டுவரிகளை பாகம் பிரிக்காமல் உள்ள “ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ்” என்ற நிறுவனத்தின் பெயருக்கு மாற்றிட ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு உத்தரவிடுமாறு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரர் தமது புகார் மனுவிற்கான ஆதாரங்களாக ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் உள்ள பதிவு ஆவண எண்.98/1991, 1630/1978, 1815/1979, 1314/1977, 1901/1977 மற்றும் 122/1980 ஆகியவற்றின் நகல், ஆண்டிபட்டி பேரூராட்சி கடிதம் ந.க.எண்.10/2014 நாள் 18.10.2016ன் நகல், ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் பங்குதாரர்கள் பத்திர நகல் (Partnership Deed), வழக்கு எண்.159/2015 பிராது நகல் மற்றும் தீர்ப்பு நகல் மற்றும் ஆண்டிபட்டி பேரூராட்சி வீட்டுவரி விண்ணப்ப மனு நகல் ஆகியவற்றினை தனது புகார் மனுவுடன் இணைத்தனுப்பியுள்ளார்.

3. மனுதாரரின் புகார் மனு மீது ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தினால் கோரப்பட்டது. அதன் அடிப்படையில், ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 15.11.2021 நாளிட்ட விளக்க அறிக்கையில் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சி சக்கம்பட்டி பகுதியில் சர்வே எண்.488/1A 489/2A, உள்ள இடத்திற்கு வீட்டுவரி எண்கள்.(1) 6728 (தற்போது வரிவிதிப்பு எண்.8324) (2) 6731 (தற்போது வரிவிதிப்பு எண்.8327) (3) 6900 (தற்போது வரிவிதிப்பு எண்.8820) (4) 6654 (தற்போது வரிவிதிப்பு எண்.8740) (5) 10525 (தற்போது வரிவிதிப்பு எண்.8711) (6) 10567 (தற்போது வரிவிதிப்பு எண்.8862) ஆகிய கட்டிடங்களுக்கு சொத்துவரி கேட்புப் பதிவேட்டின்படி கீழ்க்கண்டவாறு உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்:-

| வ.எண் | பழைய சொத்து வரி விதிப்பு எண் | புதிய சொத்துவரி விதிப்பு எண். | கேட்புப் பதிவேட்டின்படி உள்ள பெயர் |
|---|---|---|---|
| 1. | 6728 | 8324 | ஆர். தியாகராஜன் |
| 2. | 6731 | 8327 | ஆர். தியாகராஜன் |
| 3. | 6900 | 8820 | ஆர். தியாகராஜன் |
| 4. | 10567 | 8862 | ஆர். தியாகராஜன் |
| 5. | 10525 | 8711 | த. ராஜன் |
| 6. | 6654 | 8740 | த. ராஜன் |

4. ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டெல்ஸ் என்ற ஸ்தாபனத்திற்கு நான்கு நபர்கள் பங்குதாரர்களாக 1975ஆம் ஆண்டு முதல் இருந்துவந்துள்ளனர் என்றும், இதுகுறித்த விவரம் வணிகவரித்துறை உதவி ஆணையர், தேனி கடித ந.க.எண்.168/2013/அ1 நாள் 18.4.2013இல் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அதன் நகலினையும் தமது அறிக்கையுடன் ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் இணைத்தனுப்பிவைத்துள்ளார்.

5. ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டெல்ஸ் நிறுவன பங்குதாரர்களான திரு. எஸ். ராமராஜ், திரு. எஸ். ராஜசேகரன், திரு எஸ். தண்டாயுதம் மற்றும் திருமதி எஸ். நாச்சியார் ஆகிய நான்கு நபர்களுக்கும் ஸ்தாபன சொத்துக்களில் உள்ள பங்குகள் குறித்த ஒப்பந்தம் 25.2.1985ல் இயற்றப்பட்டு, நான்கு பங்குதாரர்களுக்கும் நிறுவனத்தின் சொத்துக்கள், கடன்கள் மற்றும் இதர பரிபாலனங்களில் சரிசமமாக நான்கு பங்குகளாக உரிமை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், நான்கு பங்குதாரர்களுமே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நபர்களாவார்கள் என்றும், இவர்களில் திரு. ராமராஜ் என்பவரின் தந்தையும் கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் நிர்வாகஸ்தருமான மு.அ. சுப்பிரமணியம் என்பவர் காலமாகிவிட்டார். மேற்படி நிலம் தொடர்பாக ஆண்டிப்பட்டி உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.159/2015 நிலுவையில் இருந்துவந்ததால், மனுதாரர் அளித்த மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலவில்லை. மனுதாரரின் மகன் திரு. ஆர். தியாகராஜன் என்பவர் ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் சொத்து தொடர்பாக கோரிய மனுவிற்கும் மேற்படி வழக்கின் நிலையை குறிப்பிட்டு, வழக்கின் முடிவினை பொருத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று பேரூராட்சி கடிதம் ந.க.எண்.1100/2018 நாள் 30.05.2019ல் பதில் வழங்கப்பட்டதாகவும் ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

6. மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆண்டிபட்டியில் நிலுவையிலிருந்த அசல் வழக்கு எண்.159/2015இல் மனுதாரரான திரு. ராஜசேகர் என்பவரின் மகன் திரு. தியாகராஜன் வாதியாக இருந்தும், வழக்கு விசாரணைக்கு பலமுறை பட்டியலிடப்பட்டு, வாதி அழைக்கப்பட்டு ஆஜராகாததால், 8.1.2021ல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் மேற்படி சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு எண். W.P (MD) No.9720/2021 வாரிசுதாரர்கள்/பங்குதாரர்–களிடையே வழக்குகள் தற்போதுவரை நிலுவையில் உள்ளன. மேலும், மேற்படியார்களுக்குச் சொந்தமான மேற்படி சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களின் சர்வே எண்.488/1A, 489/2A. 489/2B, 489/3, 489/5 மற்றும் 499/2B2B ஆகிய இடங்களின் பட்டா மாறுதல் குறித்து பெரியகுளம் சார் ஆட்சியர் அவர்களின் கடித எண். 2141/2021/அ1–ன்படி (லேட்) M.A. சுப்பிரமணியன் என்பவரின் வாரிசுதாரர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு விசாரணை நடைபெற்றுவருவதாலும், மேற்கண்ட நீதிமன்ற வழக்கின் முடிவின் அடிப்படையிலும், பெரியகுளம் சார் ஆட்சியர் அவர்களின் விசாரணை முடிவின் அடிப்படையிலும், மனுதாரரின் 18.1.2021 மற்றும் 08.02.2021ம் நாளிட்ட கோரிக்கை

மனுவின்மீது உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால், மனுதாரரது மனு நிலுவையில் வைக்கப்பட்டுள்ளதாக ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். மேலும், மனுதாரரால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தகவல்கள் கோரப்பட்டமைக்கு, செயல் அலுவலரின் கடிதம் ந..க.எண்.725/2021/அ2 நாள் 11.10.2021ல் பதில் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

7. திரு. தியாகராஜன் என்பவரால் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆண்டிபட்டியில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.159/2015ல் 8.1.2021ல் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரையின் விவரம் வருமாறு:-

"தாவா 1–வது லக்க சொத்தானதும், இந்த நிர் வாதிக்கு 1ம் பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பு ந.க.எண்.10/2014 ஆண்டிபட்டி பேரூராடசி நா. 09.1.2015 சட்டப்படி செல்லாது null and void என விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரியும், தாவா 2வது லக்க சொத்தானதும், இந்த நிர் வாதிக்கும் 1ம் பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பு–2 ந.க.எண்.10/2014 ஆண்டிபட்டி பேரூராட்சி நாள் 28.9.2015 சட்டப்படி செல்லாது null and void என விளம்புகை பரிகாரம் வழங்கக் கோரியும், தாவா 1, 2வது லக்க சொத்தான அறிவிப்புகளின்பேரில் இந்த நிர் வாதி பெயரிலுள்ள கட்டிட அனுமதி எண்.130/2013–2014 நாள் 06.2.2014ம் மற்றும் சொத்துவரி விதிப்பு எண்.6728 மற்றும் 6731–ஐ 1 முதல் 4 பிரதிவாதிகளோ, அவரது வகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ ரத்து செய்யவோ அல்லது பெயர் மாற்றம் செய்யவோ கூடாது என நிரந்தர நிலையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், இவ்வழக்கின் செலவுத் தொகையினை வாதிக்கு 5 முதல் 7 பிரதிவாதிகள் செலுத்தவேண்டியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப்பட்டு வாதி அழைத்து, ஆஜராகாததாலும் அவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும் 1–ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது".

8. மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்கீழ் சில தகவல்களை வழங்குமாறு கோரியதற்கு பொது தகவல் அலுவலர்/செயல் அலுவலர், ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூரராட்சியால் 11.10.2021 நாளிட்டு அளிக்கப்பட்டுள்ள பதில் அறிக்கையில் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள சொத்துக்க. அனைத்தும் வாரிசுதாரர்கள்/பங்குதாரர்கள் இடையே மனுவில் குறிப்பிட்ட சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் தொடர்பாக நீதிமன்ற வழக்கு நடைபெற்று வந்ததாலும், தற்போது சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு எண்.W.P (MD) No.9720 of 2021–ன்படி வாரிசுதாரர்கள் பங்குதாரர்களிடையே சொத்து தொடர்பாக வழக்கு நிலுவையாக உள்ளது. மேலும் மேற்படியாளர்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் பட்டா மாறுதல் செய்வது குறித்து பெரியகுளம் சார் ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2141/2021/அ1 நாள் 19.08.2021ன்படி விசாரணை நடைபெற்று வருவதாலும் மேற்கண்ட நீதிமன்ற வழக்கு முடிவின் அடிப்படையிலும், பெரியகுளம் சார் ஆட்சியர் அவர்களின் விசாரணை முடிவின் அடிப்படையிலும் மனுவின் மீது உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரரது கோரிக்கை குறித்த வழக்கு (W.P (MD) No.9720 of 2021) மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்துகொள்ள மனுதாரரை 25.01.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 19.1.2022 நாளிட்ட அழைப்பாணை அவருக்கு அனுப்பப்பட்டது. மனுதாரர் திரு. சு. ராமராஜ் 25.01.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் “தேனி மாவட்டம், ஆண்டிபட்டி பேரூராட்சியில் எனது தந்தை திரு. எம்.எ. சுப்பிரமணியம் என்பவருக்குச் சொந்தமான ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் என்கின்ற சிறிய நூற்பாலை இயங்கி வருகிறது. அத்தொழிற்சாலையில் 8 தொழிலாளர்களைக் கொண்டு வேட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மேற்கண்ட ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம் பாகம் பிரிக்கப்படாமல் கூட்டாமை நிறுவனமாக இயங்கி வருகிறது. இதற்கான சொத்து வரி கேட்பினை மேற்கண்ட ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் பெயரிலேயே பெயர் மாற்றம் செய்யுமாறு பேரூராட்சியில் பலமுறை விண்ணப்பங்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் பேரூராட்சியால் எடுக்கப்படவில்லை. இந்நேர்வு தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் எவ்வித வழக்கும் தற்போது நிலுவையில் இல்லை. எனவே, சொத்துவரி கேட்பினை மேற்கண்ட ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் பெயரில் மாற்றம் செய்ய ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு உத்தரவிட ஆவன செய்யும்படி தங்களை கேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

10. மனுதாரர் இம்முறைமன்ற நேரடி விசாரணையின் போது ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் சொத்து விவரங்கள் குறித்து கீழ்கண்ட விவரங்களையும் அளித்துள்ளார்:-

| வரிசை எண் | ஆவண எண் | சொத்து விவரம் |
|---|---|---|
| 1. | 1288/1980 | ஆண்டிபட்டி வட்டம், திம்மரசநாயக்கனூர் பிட்.2 சர்வே எண்.2280ல் ஏக்கர் 3, சென்ட் 31ம் சர்வே எண்.2281/1ல் ஏக்கர் 2 சென்ட் 89ம் மேற்கூறிய நிலங்களில் உள்ள கிணறு மின்மோட்டார் பாத்தியம் உட்பட |
| 2. | 1815/1979 | ஆண்டிபட்டி வட்டம், ஆண்டிபட்டி பிட்.1 சர்வே எண்.488/1A சதுர அடி 2775, 489/2A சதுர அடி 998 உள்ள கட்டிடம் மற்றும் காலி இடமும் |
| 3. | 1630/1978 | ஆண்டிபட்டி வட்டம், ஆண்டிபட்டி பிட்.1 சர்வே எண்.488/1A சதுர அடி 3003 காலி இடமும் |
| 4. | 1314/1977 | ஆண்டிபட்டி வட்டம், ஆண்டிபட்டி பிட்.1 சர்வே எண்.489/2A கதவு எண்.5–16–32 ல் 35 1/2 x 19 675 உள்ள மண் வீடு |
| 5. | 1901/1977 | ஆண்டிபட்டி வட்டம், ஆண்டிபட்டி பிட்.1ல் சர்வே எண்.489/2A கதவு எண்.5–16–28 சதுர அடி 35 1/2 x 19 675ம் வரி விதிப்பு எண்.1546 உள்ள மண் காரைவீடு |

| | | |
|---|---|---|
| 6. | 1997/1980 | ஆண்டிபட்டி வட்டம், ஆண்டிபட்டி பிட்.1 சர்வே எண்.487ல் 33 ல் 19 1/2 சதுர அடி 643 1/2 காலி இடமும் |
| 7. | 98/1991 | ஆண்டிபட்டி வட்டம், ஆண்டிபட்டி பிட் 1ல் சர்வே எண்.488/1A சதுர அடி 792 காலி இடமும் |
| 8. | 122/1980 | ஆண்டிபட்டி வட்டம், ஆண்டிபட்டி பிட்.1 சர்வே எண்.488/1A 54 1/2 x 16 சதுர அடி 872 |

11. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், மனுதாரது புகார் மனு, அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், வருவாய்த்துறை/பதிவுத் துறை ஆவண நகல்கள், வில்லங்கச் சான்றுகள், ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் பங்குதாரர்களிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டு ஆவணம் (Partnership Deed), மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆண்டிபட்டி அசல் வழக்கு எண்.159/2015ல் வழங்கியுள்ள தீர்ப்புரை, மனுதாரரது வாக்குமூலம், ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை, அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுதாரர் திரு. எஸ். ராமராஜ் என்பவரால் தொடுக்கப்பட்டுள்ள நீதிப்பேராணை (W.P (MD) No.9720 of 2021) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதுரை (Affidavit) மற்றும் இதர ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- The Partnership Deed was executed on 25.2.1985, between (1) S. Rajasekaran, S/o M.A. Subramanian (2) S. Thandayutham, S/o M.A. Subramanian (3) S. Nachiar, W/o Sri. M.A. Subramanian and (4) S. Ramaraj, S/o M.A. Subramanian jointly in the name of the firm "Sri Kannan Textiles". The business of the firm is to deal in yarn, cloth etc. in No.320-C, Main Road, Sakkampatty, Aundipatty. Among other issues, the net profit or loss of the firm according to this Deed shall be divided and credited and debited to the accounts of the partners at 25% share on all the four partners.
- மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆண்டிபட்டியில் திரு. எஸ். ராஜசேகரன் என்பவரது மகன் திரு. தியாகராஜன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.159/2015 விசாரணைக்கு பட்டியலிடப்பட்டு வாதி அழைத்தும் ஆஜராகாததாலும், எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும் 8.1.2021 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.
- வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதன் அடிப்படையில் ஆண்டிபட்டி பிட்.1 சர்வே எண்.488/1A, 489/2A ல் உள்ள வீட்டுவரி எண்கள்.6728, 6731, 6900, 8740, 8711 மற்றும் 10567 ஆகியவற்றை பாகம் பிரிக்காமல் உள்ள கூட்டாமை நிறுவனமான ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயருக்கு மாற்றிட மனுதாரரால் 18.1.2021 மற்றும் 08.02.2021ல் ஆண்டிபட்டி பேரூராட்சியில் விண்ணப்பம் அளித்துள்ளதாகவும், அதன் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

12. வழக்கு நிலுவையில் இருந்தபோது மனுதாரரது கோரிக்கை குறித்து ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் அளிக்கப்பட்டுள்ள 18.10.2016 நாளிட்ட கடிதத்தில் சக்கம்பட்டி 13வது வார்டு வரிவிதிப்பு எண்கள்.6728, 6731 மற்றும் 6900 கொண்ட வீடுகளை தனது தந்தை திரு. எஸ். ராஜசேகரன் என்பவர் தனக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் தானமாக வழங்கி பத்திரம் பதிவு செய்துள்ளதாகவும், மேற்படி மனைகளை தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தரும்படி 31.1.2012ல் திரு. ஆர். தியாகராஜன் என்பவர் ஆண்டிபட்டி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.4478/2010 நாள் 30.7.2010ல் ஆவணத்துடன் மேற்படி வீட்டுவரி இரசீதுகளையும் இணைத்து சமர்பித்ததின் அடிப்படையில், ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ஆண் எண்.112, 113, 114 நாள் 09.02.2012ல் ஐந்து சிறப்பு நிபந்தனைகளுடன் பெயர் மாற்றம் செய்யப்பட்டதென்றும், மேற்படி பெயர் மாற்றம் செய்தது தவறு எனவும், வழங்கப்பட்ட ஆவணங்களில் உண்மை இல்லை எனவும் ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தின் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்களை அதன் பங்குதாரர்களின் பெயரில் ஒருவர் தனது வாரிசுதாரருக்கு தானம் செய்தது தவறு என திருமதி. எஸ். நாச்சியயர் மற்றும் திரு. எஸ். ராமராஜ் ஆகியோர் அளித்த 9.1.2015 நாளிட்ட ஆட்சேபனை சமர்ப்பித்ததன் அடிப்படையில், உரிய ஆவணங்களை ஏழு (7) தினங்களுக்கும் சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தி திரு. தியாகராஜன்என்பவருக்கு அறிவிப்பு செய்யப்பட்டு, ஆவணங்களை அவர் சமர்ப்பிக்காததால் 28.9.2015 நாளிட்ட இரண்டாவது அறிவிப்பில் மூன்று தினங்களுக்குள் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்காவிட்டால், தங்களுக்கு வழங்கப்பட்ட பெயர் மாற்ற ஆணை ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இரத்து செய்து பழைய பெயருக்கே மீள கொண்டுவரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பெயர் மாற்ற ஆணை இரத்து செய்யப்படும் என்ற இரண்டாவது அறிவிப்புக்கு எதிராக ஆண்டிபட்டி உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.159/2015ன்படி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் ஆறு நபர்களை பிரதிவாதிகளாக சேர்த்து திரு. தியாகராஜன் வழக்கு தொடர்ந்துள்ளதால், நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பேரூராட்சி நிர்வாகம் மேல் நடவடிக்கை எடுக்குமென மனுதாரரான திரு. எஸ். ராமராஜுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

13. தற்போது, அசல் வழக்கு எண்.159/2015ஐ தள்ளுபடி செய்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 8.1.2021ல் தீர்ப்பளித்துள்ள நிலையிலும், மனுதாரர் இம்முறைமன்ற நேரடி விசாரணையின்போது அளித்துள்ள வாக்குமூலத்தில் இந்நேர்வு குறித்து உயர்நீதிமன்றத்தில் எவ்வித வழக்கும் தற்போது நிலுவையில் இல்லை என்று எழுத்துபூர்வமாக தெரிவித்து உறுதியளித்துள்ள நிலையிலும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களை மட்டுமே பங்குதாரர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீ கண்ணன் டெக்ஸ்டைல்ஸ் என்ற கூட்டாமை நிறுவனத்தின் பெயரில் மட்டுமே வீட்டுவரிகளை மாற்றிட உத்தரவிடுமாறு மனுதாரரால் கோரப்பட்டுள்ளதால், மனுதாரரின் 18.1.2021 மற்றும் 08.02.2021 நாளிட்ட மனுக்களை ஆய்வு செய்து, ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அம்மனுக்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின், அது சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் சமர்ப்பித்து அதன் மீது அரசு வழக்குரைஞரின் சட்ட கருத்துரையை (Opinion) பெற்று, அதன் அடிப்படையில் சட்ட விதிகளுக்குட்பட்டு, உரிய மேல் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு

அறுவுறுத்தப்படுகிறார். மேலும், மக்கள் சாசனத்தின்படி பெயர்மாற்ற விண்ணப்பங்கள் பெறப்பட்ட நாளிலிருந்து, மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரத்தினை தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு உரிய காலத்திற்குள் நடவடிக்கை எடுக்காத ஆண்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

2022ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/ x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. சு. ராமராஜ், த/பெ சுப்ரமணியன்,
320 தேனி மெயின் ரோடு, சக்கம்பட்டி, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்
செயல் அலுவலர்,
ஆண்டிபட்டி தேர்வுநிலை பேரூராட்சி, ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (உறையில் பெயரிட்டு)

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

-/ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது/–

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032